செய்தி வெளியீடு எண்:207 நாள் : 10.05.2014

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.5.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 16.3.2014 அன்று அனு என்ற வெள்ளைப் புலி ஈன்றெடுத்த இரண்டு பெண் புலி குட்டிகளுக்கு தாரா மற்றும் மீரா என்றும், ஒரு ஆண் புலி குட்டிக்கு பீமா என்றும், 23.3.2014 அன்று நம்ருதா என்ற புலி ஈன்றெடுத்த இரண்டு ஆண் புலி குட்டிகளுக்கு ஆதித்யா மற்றும் கர்ணா என்றும் பெயர் சூட்டினார்கள். மேலும் சத்யமங்கலம் வனப் பகுதியில் ஆதரவற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டு வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வரும் பெண் புலி குட்டிக்கு உத்ரா என்றும் பெயர் சூட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.3.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நேரில் சென்று ஏழு புலிக் குட்டிகளுக்கு அர்ஜூனா, ஆத்ரேயா, காவேரி, சித்ரா, நேத்ரா, வித்யா, ஆர்த்தி என்று பெயர் சூட்டினார்கள். மேலும், பூங்காவில் வன விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் உணவு மற்றும் பாதுகாப்பு குறித்தும், பார்வையாளர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறு வன உயிரினங்களை ஆண்டிற்கு சராசரியாக 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டு களிக்கின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 16.3.2014 அன்று அனு என்ற வெள்ளைப் புலி இரண்டு பெண் புலி குட்டிகளையும், ஒரு ஆண் புலி குட்டியையும் ஈன்றது. 23.3.2014 அன்று நம்ருதா என்ற புலி இரண்டு ஆண் புலி குட்டிகளை ஈன்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அனு என்ற வெள்ளைப் புலி ஈன்றெடுத்த இரண்டு பெண் புலி குட்டிகளுக்கு தாரா (THAARAA) மற்றும் மீரா (MEERAA) என்றும், ஒரு ஆண் புலி குட்டிக்கு பீமா (BHEEMAA) என்றும், நம்ருதா என்ற புலி ஈன்றெடுத்த இரண்டு ஆண் புலி குட்டிகளுக்கு ஆதித்யா (AADHITHYAA) மற்றும் கர்ணா (KARNAA) என்றும் பெயர் சூட்டினார்கள். மேலும் சத்யமங்கலம் வனப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வரும் பெண் புலி குட்டிக்கு உத்ரா (UTHRAA) என்று பெயர் சூட்டினார்கள்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.